SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.கோ.மதிசரவணன், இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், திருவாரூர் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2-1) துறை</u>

அரசாணை (4ப) எண்.04

நாள்: 21.03.2022
பிலவ, பங்குனி – 7
திருவள்ளுவராண்டு-2053

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண். 72982 / 2019 / பி.3, நாள்.11.01.2022.

******

<u>ஆணை:-</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறை, திருவாரூர், உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிய திரு.சு.கோவிந்தசாமி 03.08.2019 அன்று மாரடைப்பின் காரணமாக பணியில் இருக்கும்போது இயற்கை எய்தியுள்ளார் எனவும், அன்னாரது மகனான திரு.கோ.மதிசரவணன் 08.11.2019 நாளிட்ட விண்ணப்பத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரியதன்பேரில் ஆணையரது செ.மு.ந.க.எண்.72982 / 2019 / பி3, நாள்.04.02.2020-ல் இந்து சமய அறநிலையத்துறை, திருவாரூர், உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு 14.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், அன்னார் விண்ணப்பித்த நாளில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயது தகுதியினை பெற்றிருந்தார் எனவும், கருணை அடிப்படையில்

Scanned with CamScanner

பணிநியமனம் கோரி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளிக்கப்பட்டு... எனவும், திரு.கோ.மதிசரவணன் என்பவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 14.02.2020 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை திருவாரூர், உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.கோ.மதிசரவணன் என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 14.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், ஊதிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3973 / க்யு 1 / 2022, நாள்.04.03.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.8067 / ஜி2 / 2022, நாள்.17.03.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திரு.கோ.மதிசரவணன், இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், திருவாரூர்.(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.

நகல்:–
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், திருவாரூர்.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/3/22
பிரிவு அலுவலர்

21/3/22

Scanned with CamScanner